## சுருக்கம்

உள்ளூர் விடுமுறை – மதுரை மாவட்டம் – அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் 17.09.2026 (வியாழக்கிழமை) அன்று நடைபெற உள்ளதை முன்னிட்டு மதுரை மாவட்டம் முழுமைக்கும் உள்ளூர் விடுமுறை அறிவித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பொது (பல்வகை)த் துறை

அரசாணை (வாலாயம்) எண்.3262

நாள்: 12 .09.2026
பராபவ வருடம் , ஆவணி– 26 ,
திருவள்ளுவர் ஆண்டு–2057

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.154, பொது (பல்வகை)த் துறை, நாள் 03.09.2009.
2. அரசு கடித எண்.8585/பல்வகை/2013–7, நாள் 21.02.2014.
3. அரசாணை (வா) எண். 291, பொது (பல்வகை)த் துறை, நாள்: 24.01.2023.
4. அரசாணை (வா) எண். 1537, பொது (பல்வகை)த் துறை, நாள்: 03.04.2025.
5. மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை மாவட்டம் அவர்களின் கடித எண். ந.க.Eoffice 4913236/2026/பஅ6, நாள்: 20.08.2026.

*****

### ஆணை:

மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் 20.08.2026–ஆம் நாளிட்ட கடிதத்தில், மதுரை மாவட்டம் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலில் மகா கும்பாபிஷேகம் 17.09.2026 (வியாழக்கிழமை) அன்று நடைபெறவுள்ளதாகவும், இந்நிகழ்வு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் சிறப்பு நிகழ்வு என்பதாலும், தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து சுவாமி தரிசனம் செய்யவும், குடமுழுக்கு விழாவினை காண்பதற்கு இலட்சக்கணக்கான பக்தர்கள் மதுரைக்கு வருகை புரிவார்கள் என்பதாலும், உள்ளூர் விடுமுறை வழங்க அரசின் ஆணையைக் கோரியுள்ளார்.

/தபா

2. மதுரை மாவட்ட ஆட்சித்தலைவரின் கோரிக்கையினை அரசு கவனமுடன் பரிசீலித்து, மதுரை மாவட்டம், அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும் நாளான 17.09.2026 (வியாழக்கிழமை) அன்று அம்மாவட்டத்திலுள்ள மாநில அரசு அலுவலகங்களுக்கும் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கும் (பள்ளி, கல்லூரிகளில் நடைபெறும் தேர்வுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில்) உள்ளூர் விடுமுறை அறிவிக்க மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேலும், அந்த விடுமுறையை ஈடு செய்யும் பொருட்டு, 26.09.2026 (சனிக்கிழமை) அன்று பணிநாளாக அறிவிக்கவும் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தப்படுகிறார்.

3. மேற்கண்ட உள்ளூர் விடுமுறை தினமானது செலாவணி முறிச்சட்டம், 1881 (Under Negotiable Instruments Act, 1881)-ன் கீழ் அறிவிக்கப்படவில்லை என்பதால், அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு அம்மாவட்டத்தில் உள்ள கருவூலம், சார்நிலைக் கருவூலங்களும் குறிப்பிட்ட பணியாளர்களோடு செயல்பட தகுந்த ஏற்பாடு செய்யுமாறு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

எ. சுந்தரவல்லி
அரசு செயலாளர்

<u>பெறுநர்</u>

மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை மாவட்டம்.
கருவூல அலுவலர், மதுரை மாவட்டம்.
முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.
அனைத்துத் துறை செயலாளர்கள்,
தலைமைச் செயலகம், சென்னை-9.
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

<u>நகல்:-</u>

உதரி/இருப்பு கோப்பு

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்